**செ. கு. எண்**:427 **நாள்**:30.11.2012

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்

என்ற வள்ளுவரின் வாக்குபடி, மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையில் நீதி நெறி தவறாமல், அமைதிப் பூங்காவாகத் திகழ நடவடிக்கைகள் எடுத்து, தமிழகத்தில் மிகச் சிறந்த நல்லாட்சி, பொற்கால ஆட்சி நடைபெறும் இவ்வேளையில், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, இந்திய அரசமைப்பின்படி அமைக்கப்பெற்ற சட்டமன்றப் பேரவையின் வைர விழா நிகழ்ச்சிக்கு தலைமையேற்றிருக்கும் மேதகு ஆளுநர் அவர்களே, இனிய மாலைப் பொழுதில், பொன்னான இவ்வேளையில், வைர விழாவிற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அழைப்பினை ஏற்று தலைமை விருந்தினராக கலந்து கொண்டுள்ள சுவாமி விவேகானந்தர் தோன்றிய மண்ணில் பிறந்து அனைவராலும் பாராட்டப்படுகிற மேதகு குடியரசு தலைவர் அவர்களை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சார்பாகவும், அனைவரின் சார்பாகவும் வரவேற்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

மிகுந்த பணிச் சுமைக்கிடையில் இவ்விழாவில் கலந்துகொள்ள இசைவு தெரிவித்தமைக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை மேதகு குடியரசு தலைவருக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாநிலத்தினுடைய நிதிநிலை அறிக்கையை 16 முறைகள் சமர்ப்பித்த பெருமை பெற்றவர், அனைத்துத் துறைகளிலும் மிகுந்த அனுபவம் வாய்ந்த மேதகு ஆளுநர் அவர்களை வரவேற்பதில் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியாவை வல்லரசு நாடாக உருவாக்கக் கூடிய ஒரே தலைவர் என்று பிரான்ஸ் பத்திரிக்கை பாராட்டுகிறது.

பாராளுமன்றங்களின் தாய்க்கும் தாயாக இருக்கும் பழமையான ஐஸ்லேண்டு பாராளுமன்றத்தின் பிரசிடெண்ட் அவர்கள், மக்கள் நலன் காக்கும் இரும்புப் பெண்மணி எனப் புகழாரம் சூட்டுகிறார்.

இவ்வாறு தினந்தோறும் உலக அரங்கிலே அனைவராலும் பாராட்டப்படுகிற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை இந்த இனிய விழாவிற்கு வருக, வருக என வரவேற்கிறேன்.

வாழ்த்துரை வழங்க இசைவு தெரிவித்து, வருகை புரிந்துள்ள மாண்புமிகு தலைமை நீதியரசர் அவர்களையும், அழைப்பினை ஏற்று வருகைபுரிந்துள்ள புதுச்சேரி சட்டமன்ற பேரவைத் தலைவர் அவர்களையும், முதல் சட்டமன்றப் பேரவையின் மூத்த மாண்புமிகு உறுப்பினர்களையும் வருக, வருக என வரவேற்கிறேன்.

மாண்புமிகு பேரவை முன்னவர், அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், அரசு தலைமைக் கொறடா, நீதியரசர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்றக் கட்சித் தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர், அரசுச் செயலாளர்கள் உள்ளிட்ட துறை அதிகாரிகள், காவல் துறை அதிகாரிகள், சிறப்பு அழைப்பாளர்கள், சட்டமன்றப் பேரவைச் செயலாளர் ஆகியோரையும் வருக வருக என வரவேற்கிறேன்.

ஜனநாயகத்தின் நான்கு தூண்களாகக் கருதப்படும் சட்டமன்றம், நிருவாகம், நீதிமன்றம் மற்றும் பத்திரிகை துறைகளைச் சார்ந்த நண்பர்களே, உங்கள் அனைவரையும் வருக, வருக என வரவேற்கிறேன்.

முதல் சட்டமன்ற உறுப்பினர்களை இங்கே மேடையில் அமர்த்தி, கௌரவப்படுத்த வேண்டுமென, முன்னோடியாக, மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவுரை வழங்கியமைக்காக அனைத்து உறுப்பினர்களின் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

வைர விழா காணும் தமிழக சட்டமன்றப் பேரவையில் கடந்த 60 ஆண்டுகளில் பல சட்டங்கள், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் பேரவையில் கொண்டுவரப்பட்டு, நிறைவேற்றப்பட்ட பல சட்டங்கள், தீர்மானங்கள் இந்தியாவிற்கே முன்னோடியாகத் திகழ்வதோடு, மாண்புமிகு அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட பல திட்டங்கள் மற்ற மாநிலங்களால் பின்பற்றப்படுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

பாராளுமன்ற விதிமுறைகளையும், சட்டமன்ற நடைமுறைகளையும் நன்கு அறிந்துள்ள மாண்புமிகு அம்மா அவர்கள், அவை விதிகளுக்கு மரபுகளுக்கு உட்பட்டு, அவை நடவடிக்கைகள் நடைபெறவேண்டும் என்பதில் உறுதியாக உள்ளவர்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள், சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டு, மிகுந்த உற்சாகத்துடன் விவாதங்களில் பங்குபெற்று, எந்தத் துறை சம்பந்தப்பட்ட விவாதமானாலும் சரி, விரல் நுனியில் விவரங்களை வைத்துக்கொண்டு பதில் அளிப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டுள்ளேன்.

நாள்தோறும், அவையின் நிகழ்ச்சிநிரலை கையிலே வைத்துக் கொண்டு, ஒவ்வொரு அலுவல் முடிவுற்றப் பின்னரும், டிக் செய்து கொண்டும், சட்டமுன்வடிவு மற்றும் தீர்மானங்கள் வாக்கெடுப்பிற்கு விடப்படுகையில், மிகுந்த பெரும்பான்மை இருக்கிறதே என வாளாயிராமல், வாக்கெடுப்பின்போது ஏற்பதற்கு அடையாளமாக "ஆம்" என்று ஒவ்வொரு முறையும் அம்மா அவர்கள் தவறாது குறிப்பிடுவதைக் கண்டு பெருமைப்பட்டுள்ளேன்.

சட்டமன்ற நடவடிக்கைகளில் ஒவ்வொரு உறுப்பினரும் எவ்வாறு ஈடுபாட்டுடன் இருக்க வேண்டும் என்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களே உதாரணமாகத் திகழ்கிறார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மக்கள் நலத் திட்டங்களை அறிவிப்பதில்தான் எத்தனை மகிழ்ச்சி.

இந்த ஒன்றரை ஆண்டு காலத்தில், மாண்புமிகு அம்மா அவர்கள் விதி 110 இன் கீழ் பேரவையில் அறிவித்த 64 அறிவிப்புகளால் மட்டும் பலரின் விதிகள் மாற்றப்பட்டன. எனக்கு நெகிழ்ச்சியைத் தந்த நாட்கள் பல.

சமுதாயத்தின் அனைத்து மக்களும் ஏற்றம் பெறும் வகையில் தினந்தோறும் வியக்க வைக்கும் அறிவிப்புகள்.

அனைவரையும் சமமாகப் பாவித்து, ஏழைக் குழந்தைகளுக்கு சத்துணவு தரும் தாயாய்; மாணவர்களுக்கு கல்வி தரும் ஆசானாய்; இளைய சமுதாயத்தின் எதிர்காலமாய், திருமணப் பெண்ணிற்கு தங்கத் தாரகையாய்; தாய்மார்களுக்கும் அன்னையாய், முதியோர்களின் ரட்சகராய்; உழைக்கும் வர்க்கத்தின் ஒளிவிளக்காய் ஏழைகளின் ஏந்தலாய், நாளைய சமுதாயத்தின் நம்பிக்கை நட்சத்திரமாய் திகழ்வதால்தான் அன்பு காட்டி ஆதரிப்பதால்தான் மக்கள் அனைவரும் அம்மா அம்மா என்று பாராட்டுகிறார்கள்.

அனைவருக்கும் மேலானவராக அம்மாவைப் போற்றுகிறார்கள்.

தமிழ் மக்களை தன் மக்கள் என நினைத்து, அல்லும் பகலும் அயராது உழைத்து, இந்திய அரங்கில் தமிழ் மாநிலத்தை, முதல் மாநிலமாக்குவதே என் குறிக்கோள் என அயராது ஓய்வில்லாமல் நாளெல்லாம் உழைக்கும் அம்மா அவர்கள் ஆட்சிபுரியும் இந்நாளில், வரலாற்றில் இடம்பெறக்கூடிய வைர விழா நிகழ்ச்சி நடைபெறுவது சாலப் பொருத்தமானதாகும்.

இன்று அம்மா அவர்களின் ஆணையினால் செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் சட்டமன்றம் வைர விழா காண்கிறது.

நாளை செங்கோட்டையில் இந்தியாவின் வரலாற்றை மாண்புமிகு அம்மா அவர்கள் தன்னுடைய திருக்கரங்களால் வைர வரிகளில் எழுதுவார்கள் என இந்திய நாடு எதிர்பார்க்கிறது.

சமுதாயத்தின் கடைநிலையில் உள்ள என்னைப் போன்றவர்களை உறுப்பினர்களாக்கி, பேரவைத் தலைவர் பொறுப்பையும் எளியோனுக்குத் தந்து, யாருக்கும் கிட்டாத ஒரு வாய்ப்பாக, இந்த வரலாற்று வைர விழா நிகழ்ச்சியின்போது, வரவேற்பு, நல்கும் வாய்ப்பையும் மாண்புமிகு அம்மா அவர்கள் தந்துள்ளார்கள்.

என்ன தவம் செய்தேனோ . . . . . . . மிகப் பெரிய பேறு பெற்றேன். வணங்குகிறேன் தாயே ! நன்றிகளைக் காணிக்கையாக்குகிறேன்.

இவ்விழாவிற்கு வருகை தந்துள்ள அனைவரையும் மீண்டும் ஒரு முறை வருக, வருக என்று வரவேற்று என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி. வணக்கம்.

- * * * * *

- **வெளியீடு:**
- **இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**